# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண் 241/மா/2024**

**நாள் 11.02.2026**

| | | |
|---|---|---|
| G. தங்கவேல்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தூத்துக்குடி மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை, எஸ்.கொளத்தூர், பாக்கியலட்சுமி நகர், 2வது தெரு, மனை எண்.216, எஸ்.1, 2வது மாடி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தங்கவேல் என்பவரின் 06.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.11.2024 அன்று பெறப்பட்டு, 241/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை, எஸ்.கொளத்தூர், பாக்கியலட்சுமி நகர், 2வது தெரு, மனை எண்.216, எஸ்.1, 2வது மாடி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தங்கவேல் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சியின் அதிகாரிகள் / ஊழியர்களின் செயல்பாடுகள் சட்டவிரோதமாகவும் / வெகுஜனவிரோதமாகவும் மோசடியாகவும் உள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு–6), மேட்டுப்பட்டு சாலையின் ஓரத்தில் இருக்கும் சில மாநகராட்சியின் மின் கம்பம் விளக்குகள் (EB Post) வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் சுமார் 6 அடி தூரத்தில் வீட்டிற்குள் உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களிடம் மாநகராட்சி அதிகாரிகள் கையூட்டு பெறுவதினால் அவர்கள் வரைபட அங்கீகாரம் இல்லாமல் கட்டிய / கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளுக்கு கதவு எண், வரிவிதிப்பு எண், குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார்கள். மேலும் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவ அரசு ஒப்படைநில உப்பளபகுதிக்குள் அத்துமீறி நுழைந்து – மாநகராட்சி பணத்தை வீணடித்து – தார்சாலைகள் அமைத்து கொடுத்துள்ளதுடன் – மழைநீர் / கழிவுநீர் கான்கள் மூலம் உப்பளத்தினுள் விட்டு வருகிறார்கள். 18.10.2024 நாளிட்ட புகார் மனு மின்னஞ்சல் / பதிவு தபால் மூலம் தூத்துக்குடி

மாநகராட்சிக்கும் தொடர்புடைய துறை அலுவலகங்களுக்கும் கொடுக்கப்பட்டு நடவடிக்கை இல்லை.

மேலும், உப்பள பகுதிக்குள் ஆக்கிரமிப்பாளர்கள் விஷமிகள் நடமாட்டத்தால் பல மின் மோட்டார்கள் காணாமல் போயுள்ளதுடன், பலவித போதை பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. தாளமுத்துநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் நடவடிக்கை இல்லை. (THE HINDU பத்திரிக்கை செய்தி)

மேலும், தற்போது சாலை அமைத்துள்ள (தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி பகுதி–I, கிராமம் புல எண் 419 முதல் 490, விஸ்தீரணம் 177.02 மற்றும் 187.22 ஏக்கர் ஷை நிலம் அளவீடு செய்தாலும் பதிவுக்கு வரவில்லை. (அன்சர்வேட் லேண்ட்) மேற்படி இடம் குறித்து தூத்துக்குடி மாநகராட்சியில் 2019–ல் RTI மூலம் பெறப்பட்ட கடிதம் ந.க. எண்.இ1/1898/2019/வ.ம நாள் 22.07.2019–ல் தகவல்படி காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்கள் சங்க அரசு ஒப்படை நிலத்திற்கு சொந்தமான ரோடு ஆகும் என குறிப்பிட்டு தகவல்கள் வழங்கிவிட்டு தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவிட கையூட்டு பெற்று தார்ரோடு அமைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் மாநகராட்சி மக்கள் வரி பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு நில ஆக்கிரமிப்புகளை அகற்ற உயர்நீதிமன்றமும் அது குறித்த துறைகளின், Chennai, Commissioner of Land Administration Circular Dt.26.02.2024 "T3/6691791/2023" உத்தரவுகளை மதிக்காமல் மாநகராட்சி பணத்தை வீணடித்து தங்களுக்கு உரிமையில்லாத இடத்தில் மாநகராட்சி பணத்தை செலவு செய்து ஒப்பந்ததாரர் மூலம் வருமானத்துக்கு அதிகமாக பணம் சம்பாதித்து வருவதை மாநகராட்சி அதிகாரிகள் வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

மேலும், பணியாளர் நன்னடத்தை சட்டம் 1973படி (SR) பணிப்பதிவேட்டில் (SR Digital / IFHRMS eSR) பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது தேதிவரை ஒவ்வொரு ஆண்டும் அல்லது நேர்வுக்கு ஏற்ப ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தனது பெயரில் உள்ள அசையும் / அசையா சொத்து விபர அறிக்கையை நடத்தை விதியின் விதி 7(3)ன்படி வரையறுக்கப்பட்டவாறு அட்டவணை 1 முதல் 5 வரை உள்ள படிவங்களில் அறிக்கை தாக்கல் செய்வது குறித்த விபரங்கள் தூத்துக்குடி மாநகராட்சிக்கு அதிகாரிகளுக்கு பதியப்படுகிறதா ? என்பதில் மிகுந்த ஐய்யப்பாடு உள்ளது ? மேலும் ஷை பொது ஊழியருக்கு சட்டப்படி மந்தன குறிப்பேடு ACR (Annual Confidential Report) பதிவேடு எழுதப்பட்டு பராமரிக்கப்படுகிறதா எனபதிலும் ஐய்யப்பாடு உள்ளது ?

<u>வேண்டுகோள்</u>

1) மாநகராட்சி மழைநீர் / கழிவுநீர்களை அரசு ஒப்படை நில உப்பளத்தினுள் விட்டுவருவதை உடன் தடை செய்ய ஆவண செய்யவும்

2) அதிகாரிகளின் (SR) சொத்து விபர அறிக்கைகளை உறுதி செய்யவும்

3) மாநகராட்சி பணத்தை வீணடித்து அரசு ஒப்படை உப்பள நிலத்தில் (Unsurveyed Land) அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக சாலை மற்றும் கால்வாய் அமைத்து மழைநீர் / கழிவுநீர்கள் உப்பளத்தினுள் விட்டுள்ள பொறுப்பற்ற அதிகாரிகள் மீதும், ஆக்கிரமிப்பாளர்களிடம் கையூட்டு பெற்று கதவு எண், வரிவிதிப்பு எண், குடிநீர் இணைப்பு வழங்கிய ஆக்கிரமிப்பாளர்கள் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் கேடயமாக அவர்களை பாதுகாத்து அதன்மூலம் ஆதாயம் அடைந்து வரும் (1) ஒர்க் இன்ஸ்பெக்டர் (Work Inspector (2) டேப் இன்ஸ்பெக்டர் (Water Tap

Inspector (3) இளநிலை நகர பொறியாளர் (Junior Engineer) (4) உதவி பொறியாளர் (Asst. Engineer) (5) உதவி ஆணையர் (Assistant Commissioner) (6) நகர உதவி செயற்பொறியாளர் (City Assistant Executive Engineer) (7) துணை நகர பொறியாளர் (Deputy City Engineer) (8) நகர பொறியாளர் (City Engineer) (9) ஆக்கிரமிப்பை அகற்றம் பொறுப்பு மிக்க அதிகாரிகள் / அலுவலர்கள் ஆகியோர் மீது கீழ்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து ஷை சட்டவிரோத சாலைகள் போட்ட தொகை வசூலிக்க வேண்டும்.''

Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government "Tamil Nadu Civil Services Discipline and Appeal Rules.". என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 16.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய 15.07.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுவாமி விவேகானந்தர் காலனி சாலையானது, தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போது சாலை அமைக்கப்பட்டு உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மாநகராட்சியால் உருவாக்கப்படவில்லை. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்படி சாலை மாநகராட்சியால் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் பெருமளவு மழைநீர் மாநகரின் பள்ளமான சாலைகளில் அதிகளவு தேங்கி, பொதுமக்கள் சாலையினை பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தது. தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டங்களிலும், வடகிழக்கு பருவ மழையின் போது இம்மாநகருக்கு வருகை தந்த அலுவலர்களின் நேராய்வின் போது இடத்தின் தன்மைக்கேற்ப மழைநீர் வடிகால் அமைக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி பகுதியில் மழை காலங்களில் மழைநீரை நகரில் இருந்து கடத்துவதற்கு வசதியாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், உப்பளத்தில் உள்ள வாய்க்காலில் மழைநீர் வடிகால் அமைத்து மழைநீர் கடல் வரை செல்ல ரூ.3.50 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

மேலும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்ற விவரம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. G. தங்கவேல் மற்றும் அவருடன் திரு. K. பாலசுப்பிரமணியன் என்பவரும் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு–6), மேட்டுப்பட்டி சாலையின் ஓரத்தில் இருக்கும் சில மாநகராட்சியின் மின் கம்பம் விளக்குகள் (EB Post) வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் சுமார் 6 அடி தூரத்தில் வீட்டிற்குள் உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களிடம் மாநகராட்சி அதிகாரிகள் கையூட்டு பெறுவதினால் அவர்கள் வரைபட அங்கீகாரம் இல்லாமல் கட்டிய/கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளுக்கு கதவு எண், வரிவிதிப்பு எண், குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார்கள். மேலும் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவ அரசு ஒப்படைநில உப்பள பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தார் சாலைகள் அமைத்து கொடுத்துள்ளதுடன் மழைநீர் / கழிவுநீர் காண்கள் மூலம் உப்பளத்தினுள் விட்டு வருகிறார்கள். ஆனால் புகார் இணைப்பில் உள்ள அரசு சுற்றறிக்கை டி3/6691791/2023 மற்றும் W.P(MD) No.21070/2017 dated 03.11.2023ன்படியும் ஆக்கிரமிப்பு அகற்றாமல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி வருகிறார்கள்.

மேலும், தற்போது சாலை அமைத்துள்ள (தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி பகுதி–I, கிராமம் புல எண் 419 முதல் 490 விஸ்தீரணம் 177.02 மற்றும் 187.22 ஏக்கர் நிலம் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்கள் சங்க அரசு ஒப்படை நிலத்திற்கு சொந்தமான ரோடு ஆகும் என குறிப்பிட்டு 2019ம் ஆண்டு RTI–இல் தகவல்கள் வழங்கிவிட்டு தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவிட கையுட்டு பெற்று தார் ரோடு அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, தூத்துக்குடி மாநகராட்சியால் மழைநீர் / கழிவுநீர்களை அரசு ஒப்படை நில உப்பளத்தினுள் விட்டு வருவதை உடன் தடை செய்ய தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறும் மாநகராட்சி பணத்தை வீணடித்து ரோடு அமைத்த பணத்தை தொடர்புடைய அதிகாரிகளிடம் வசூல் செய்யுமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. மேலும், மனுதாரர் திரு. G. தங்கவேல் என்பவர் விசாரணையின் போது 16.07.2025 நாளிட்ட எழுத்துப்பூர்வமான வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"தூத்துக்குடி காந்தி–இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம் கட்டுப்பாட்டில் உள்ள உப்பளங்களில் எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு (மூதாதையர் காலம் முதல்) உப்பளங்கள் இருந்து வருகிறது. உப்பளத்துக்கு சென்று வரும் பாதைகளில் உள்ள குடிசை ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சியிடம் புகார் கொடுத்தால் அது (Unsurveyed Land) அரசு ஒப்படை நிலம் அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற எங்களுக்கு அதிகாரம் இல்லை என குறிப்பிடும் மாநகராட்சி அதிகாரிகள் அந்த ஆக்கிரமிப்பு குடிசைகளுக்கு கதவு எண் வரிவதிப்பு, குடிநீர் இணைப்பு கொடுத்துள்ளதுடன் தற்போது உப்பள அரசு ஒப்படை நிலங்களுக்குள் அத்துமீறி நுழைந்து மாநகராட்சி பணத்தை வீணடித்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு தார் ரோடு அமைத்து அரசு நில ஆக்கிரமிப்பாளர்களை திருப்திபடுத்தும் விதமாக நடந்து மாநகராட்சி அதிகாரிகள் ஒப்பந்ததாரர்கள் மூலம் ஆதாயம் அடைந்துள்ளனர் என்பது உண்மையான உண்மையாகும்.

மாநகராட்சி அதிகாரிகளுக்கு தாங்கள் தார் ரோடு அமைக்கும் இடம் அரசு ஒப்படை நிலம் (Unsurveyed Land) என நன்கு தெரிந்தே இந்த சட்டவிரோத செயலை செய்தால், கடந்த 18.10.2024 அன்று புகார் மனு தொடர்புடைய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிறகு 06.11.2024 தேதிய புகார் மனு சென்னை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்

முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது குறித்த மனு எண் 241/மா/2024–க்கு இந்த எழுத்துபூர்வமான வாதுரையை சமர்ப்பிக்கின்றேன்.

2019–ம் வருடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் படி தூத்துக்குடி மாநகராட்சியில் பெறப்பட்ட இணைப்பு B–ல் காணும் தகவல்கள் படி ''காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை (GISMA) சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன்கிளை ரோடுகள் கடற்கரை கட்டுப்பாட்டு பகுதியில் அமைகிறது.'' எனவும் ''காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை. உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் இல்லாத (Unsurveyed Land) ஷை உப்பள நிலங்களுக்கு காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கம், உறுப்பினர்கள் சார்பில் நாளது தேதி வரி நிலுவையில்லாமல் செலுத்தி வருகிறோம்.

காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்க கட்டுப்பாட்டு பகுதியில் உப்பு சங்கம் பாதை மேப் (1964 # Combined Sketch) இல் 1964–ம் வருடம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடங்களில் சுமார் 6 கி.மீ. பாதை /ரோடு (GISMA) சங்கம் மூலம் போடப்பட்டுள்ளது. உப்பளங்கள் சொந்த பாதை /ரோடு பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் சங்கத்தின் மூலம் செலவு செய்யப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள (Unsurveyed Land) உப்பள நில பகுதியில் பல இடங்களில் மாநகராட்சி அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் மாநகராட்சி அதிகாரிகள் (1) தார் ரோடு (2) கழிவு நீர் வாய்க்கால் மற்றும் (3) குடிநீர் பைப்லைன் அமைத்து பலகோடி ரூபாய் செலவு செய்து மாநகராட்சி பணத்தை வீணடித்துள்ளனர்.

''ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போல'' மாநகராட்சி தகவல் கடிதம் படி அரசு ஒப்படை நில (Unsurveyed Land) உப்பள பகுதிக்குள் ரூபாய் 179 இலட்சம் செலவில் ரோடு போடப்பட்டுள்ளது. ஆனால் அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்த வினாக்களுக்கு "தற்போது போடப்பட்டு வரும் மேட்டுப்பட்டிக்கு உப்பளங்களுக்கும் நடுவில் செல்லும் சாலை மன்னார் வளைகுடா நில அளவை செய்யப்படாத (Unsurveyed Land) பகுதி என்பதால் சாலை ஆக்கிரமிப்புக்காக அப்புறப்படுத்த இயலாது.'' என தகவல்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். மேலும் இதே மாதிரி பல (Unsurveyed Land) உப்பள பகுதிகளில் சட்ட விரோதமாக அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் தார் சாலைகள் மாநகராட்சி அதிகாரிகள் அமைத்துள்ளனர்.

மேலும் உப்பள (Unsurveyed Land) பகுதிக்குள் ஆக்கிரமிப்பாளர்கள் விஷமிகள் நடமாட்டத்தால் பல மின் மோட்டார்கள் காணாமல் போயுள்ளதுடன், பலவித போதை பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது தூத்துக்குடி தாளமுத்துநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் நடவடிக்கை இல்லை – THE HINDU பத்திரிக்கை செய்தி.

மேலும் அரசு நில ஆக்கிரமிப்பில் ஒரு பகுதியாக ''கிராம கணக்குகளின்படி சர்க்கார்–புஞ்சை–தரிசு எனவும் தடையாணைப் பதிவேட்டிலும் உள்ள தூத்துக்குடி வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்: 183/3 வீஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ்'' அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாநகராட்சி அதிகாரிகள் தார் ரோடு போட்டும் மாநகராட்சி பணத்தை விரையம் செய்துள்ளார்கள். மேற்படி அரசு நில ஆக்கிரமிப்பை அகற்ற சமூக

ஆர்வலர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) No.12789 of 2023 ரிட் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

மத்திய அரசு பத்திரிக்கை விழிப்புணர்வு விளம்பரச் செய்தியின்படி "Access to Information can block the path to corruption", சட்டவிரோதமாக உப்பள பகுதிக்குள் தார் ரோடுகள் போட்டதற்கான ஆன செலவு மற்றும் சில பல தகவல்கள் ஆவணங்கள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 படி (RTI) தகவல் கோரி மாநகராட்சியில் மனு செய்தாலும் சட்டவிரோதமாக செயல்படும் அதிகாரிகள் முழுமையான தகவல்கள் நாளது தேதிவரை வழங்குவதும் இல்லை. ஆக மொத்தத்தில் மக்கள் வரிப்பணம், (ஸ்மார்ட் சிட்டி) நிதி, மத்திய, மாநில அரசின் பல்வேறு ஆக்க பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பல நூறு கோடி ரூபாய்களை மாநகராட்சி அதிகாரிகள் வீணடித்துள்ளனர்.

தற்போது காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் எல்லைக்குட்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் மாநகராட்சி அத்துமீறி சாக்கடை நீர் மற்றும் மழைநீர் விட்டு வருவதுடன், அதில் பல லட்ச ரூபாய் செலவில் மாநகராட்சி கான் (வாய்க்கால்) ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு பல கோடி நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆயத்த பணி நடந்து வருகிறது. மேலும் அவ்வாறு செய்தால் பொது மக்கள் சாப்பிடும் உப்பு பாழாகி சுகாதார சீர்கேடு ஏற்பட்டு எங்கள் உப்பு உற்பத்தி தொழில் மிகவும் பாதிக்கப்படும். மேலும் எங்கள் உப்பு உற்பத்தி செய்யும் நிலப்பகுதி கடல் மட்டத்துக்கு பள்ளமாக இருப்பதால் கழிவு நீர் உப்பளத்துக்குள் புகுந்து விடும் என்பதையும் தங்கள் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஆகவே மாநகராட்சி அதிகாரிகள் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள உப்பள நில பகுதியில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் தார் ரோடு அமைத்துள்ளதால் தூத்துக்குடி மாநகராட்சி மக்கள் வரிப்பணம், (ஸ்மார்ட் சிட்டி நிதி) மத்திய, மாநில அரசின் பல்வேறு ஆக்க பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பல நூறு கோடி ரூபாய்களை மாநகராட்சி அதிகாரிகள் வீணடித்துள்ளனர். 18.10.2024 தேதிய புகார் மீது (G.O. Ms. No.99 நாள் 21.09.2015–ன்படி) நாளது தேதி வரை எந்த ஒரு நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மீதும், ஒப்படை நிலத்தில் சாலைகள் அமைத்த அது தொடர்புடைய புகார் மனு குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் ஒவ்வொருவர் மீதும் Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government "Tamilnadu Civil Services Discipline and Appeal Rules"–படி நடவடிக்கை எடுப்பதுடன், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் தக்கதென கருதும் மற்ற தீர்வுகளையும் வழங்கி உத்திரவிட வேண்டுமாய் புகார் முறையீட்டாளர் கேட்டுக் கொள்வதுடன், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மின்னஞ்சல் மூலம் / நேரில் சார்பு செய்யப்பட்ட இந்த எழுத்துபூர்வமான வாதுரையை என்னுடைய புகார் மனு குறித்த ஆணையில் "நடுவர்" பதிவு செய்யாமல் ஆணையிட்டால் இதுவே தொடர்புடைய நீதிமன்றத்தில், தொடர்புடைய மனுவில், தாக்கல் செய்வதற்கு உரிய தகுமுறை சாட்சியமாகவும் சான்று ஆவணமாகவும் ஆகிவிடும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம். நடுவர் உத்தரவுபடி மேல் அதிகாரிகள் (மாநகராட்சி அதிகாரிகள் மீது) எடுத்த நடவடிக்கைகள் அனைத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 17.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போது சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்டு உப்பளத்

தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுவாமி விவேகானந்தர் காலனி மண் சாலை சாலையானது மாநகராட்சியால் உருவாக்கப்படவில்லை. தற்போது மேற்படி சாலை மாநகராட்சியால் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மழைக் காலங்களில் பெருமளவு மழைநீர் மாநகரின் பள்ளமான சாலைகளில் அதிகளவு தேங்கி, பொதுமக்கள் சாலையினை பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தது. தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டங்களிலும், வடகிழக்கு பருவ மழையின் போது இம்மாநகருக்கு வருகை தந்த அலுவலர்களின் நேராய்வின் போது இடத்தின் தன்மைக்கேற்ப மழைநீர் வடிகால் அமைக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி பகுதியில் மழைக்காலங்களில் மழைநீரை, நகரில் இருந்து கடத்துவதற்கு வசதியாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், உப்பளத்தில் உள்ள வாய்க்காலில் மழைநீர் வடிகால் அமைத்து மழைநீர் கடல் வரை செல்ல ரூ.3.50 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

மேலும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்து கொள்கிறேன். மேலும் தார் சாலை அமைத்தற்கான புகைப்பட நகல்களை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.''.

8. மனுதாரர் குறிப்பிடும் இடம் தொடர்பாக தெளிவான அறிக்கை ஒன்றினை அனுப்பிட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் 27.10.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டது. அறிக்கை பெறப்படாததால் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர் மீண்டும் 10.12.2025 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

9. தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் 10.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''தூத்துக்குடி மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் அவர்கள் 17.07.2025 அன்று அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை இம்முறைமன்ற நடுவர் முன் பதிவு செய்கிறேன்:

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலை தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே அமைக்கப்பட்டு உப்பள தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பழுதடைந்த சாலையானது தற்போது தார்சாலையாக தூத்துக்குடி மாநகராட்சியால் போடப்பட்டுள்ளது.

சமுக ஆர்வலரால் மாண்பமை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நில ஆக்கிரமிப்பு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் W.P (MD) No.12789 of 2023, குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.183/3 தற்போது புதிப்பிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள

சாலையின் வரம்பிற்குள் வருகிறதா என்பது குறித்து அளவீடு செய்யுமாறு தூத்துக்குடி மாநகராட்சி சர்வேயர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி சர்வேயர் உடன் இணைந்து மேற்கண்ட அளவீடு செய்யப்பட்டு அது குறித்து அறிக்கையினை 15 தினங்களுக்குள் இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''.

10. மேலும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் 08.12.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“தூத்துக்குடி மாநகராட்சி திரேஸ்புரம் மேட்டுப்பட்டி சாலையின் ஓரத்தில் ஆக்கிரமிப்பில் இருக்கும் மின்கம்பத்தை மாற்றி அமைக்க மின்வாரியத்திற்கு ரூ.44,661/– கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.6 மற்றும் 7ல் உள்ள மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுவாமி விவேகானந்தர் காலனி, மேட்டுப்பட்டி சாலை தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்தபோது சாலை அமைக்கப்பட்டு உப்பளத்தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி நிர்வாகம் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு எந்தவித உதவும் நோக்கில் செயல்படவில்லை. பொதுமக்களின் அடிப்படை வசதியை கருத்தில் கொண்டு மட்டுமே ஏற்கனவே ஊராட்சி காலத்தில் அமைக்கப்பட்ட சாலையை மேம்படுத்தி தார்ச்சாலை, மழைநீர்வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது, இதில் அரசு நிதியை எந்த விதத்திலும் வீணடிக்கவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டல மேட்டுப்பட்டி பகுதியில் சுமார் 450 குடும்பத்தினர்கள் (சுவாமி விவேகானந்தா காலனி, மேட்டுபட்டி)யில் வசித்து வருகிறார்கள். பொதுமக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் அன்றாட பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே பஞ்சாயத்து காலகட்டத்தில் அமைக்கப்பட்ட தார்சாலை சிதிலமடைந்த தார்சாலையாக இருந்தது. தற்போது தூத்துக்குடி மாநகராட்சி மூலம் உப்பள பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்படுத்த தூத்துக்குடி மாநகராட்சி எல்லை வரை தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தார்சாலையை சுவாமி விவேகானந்தா காலனி ஒட்டி மழைநீர் வடிகாலோ, கழிவு நீர் கால்வாயோ அமைக்கப்படவில்லை. மேலும் லூர்தம்மாள்புரம் திருவள்ளுவர் நகர் மற்றும் மயான சாலை பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு பெரும் மழைப்பொழிவினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட மேற்படி பகுதி முழுவதும் பொதுமக்கள் பாதிப்படைந்ததை தொடர்ந்து அப்பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், மழைவெள்ளம் பாதிக்காதவாறு மழைநீர்வடிகால்வாய் உப்பள பகுதி வரை அமைக்கப்பட்டுள்ளது. 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை 202.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 04.11.2025ன்படி உப்பள பகுதியில் உள்ள வடிகால்வாய் நீர் செல்லாதவாறு மாற்று வழியில் செல்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு 15வது மத்திய நிதிக்குழுவின் மானியத்தின்படி பணி துவங்க நடவடிக்கையில் உள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் காந்தி இர்வின் உப்பு சங்கத்திற்கு எதிராகவோ, வெகுஜன விரோதமாகவோ, மோசடியாகவோ

செயல்படவில்லை. தூத்துக்குடி மாநகராட்சி பணியாளர்களுக்கான பணிப்பதிவேடு தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சி நிர்வாகம் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு எந்த வித உதவும் நோக்கில் செயல்படவில்லை. பொதுமக்களின் அடிப்படை வசதியை கருத்தில் கொண்டு மட்டுமே தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரசு நிதியை எவ்விதத்திலும் வீணடிக்கப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொது மக்களின் வெள்ளப் பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களின் நலனுக்காக மட்டுமே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.''.

11. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு–6), மேட்டுப்பட்டி சாலையின் ஓரத்தில் இருக்கும் மாநகராட்சியின் சில மின் கம்பம் விளக்குகள் (EB Post) வீட்டின் காம்பவுண்ட் சுவர் உள்பகுதியில் உள்ளது என்பதும் ஆக்கிரமிப்பாளர்கள், மாநகராட்சியின் வரைபட அங்கீகாரம் இல்லாமல் கட்டிய/கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளுக்கு கதவு எண், வரிவிதிப்பு எண், குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளது என்பதும், சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவ அரசு ஒப்படைநில உப்பள பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தார் சாலைகள் அமைத்து கொடுத்துள்ளதுடன் மழைநீர் / கழிவுநீர் காண்கள் மூலம் உப்பளத்தினுள் விட்டு வருகிறார்கள் என்பதும், அரசு சுற்றறிக்கை டி3/6691791/2023 மற்றும் W.P(MD) No.21070/2017 dated 03.11.2023ன்படியும் ஆக்கிரமிப்பு அகற்றாமல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாநகராட்சி அதிகாரிகள் உதவி வருகிறார்கள் என்பதும், தற்போது சாலை அமைத்துள்ள தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி பகுதி–I, கிராமம் புல எண் 419 முதல் 490, விஸ்தீரணம் 177.02 மற்றும் 187.22 ஏக்கர் நிலம் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்கள் சங்க அரசு ஒப்படை நிலத்திற்கு சொந்தமான ரோடு ஆகும் என 2019ம் ஆண்டு RTI–இல் தகவல்களாக மாநகராட்சியால் அளிக்கப்பட்டது என்பதும், தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவிட கையூட்டு பெற்று தார் ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்பதும், தூத்துக்குடி மாநகராட்சியால் மழைநீர் / கழிவுநீர்களை அரசு ஒப்படை நில உப்பளத்தினுள் விட்டு வருவதை உடன் தடை செய்ய தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறும் மாநகராட்சி பணத்தை வீணடித்து ரோடு அமைத்த பணத்தை தொடர்புடைய அதிகாரிகளிடம் வசூல் செய்யுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்தபோது சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்டு உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுவாமி விவேகானந்தர் காலனி மண் சாலை சாலையானது மாநகராட்சியால் உருவாக்கப்படவில்லை என்பதும், மேற்படி சாலை மாநகராட்சியால் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மழைக் காலங்களில் பெருமளவு மழைநீர் மாநகரின் பள்ளமான சாலைகளில் அதிகளவு தேங்கி, பொதுமக்கள் சாலையினை பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தது என்பதும், தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டங்களிலும், வடகிழக்கு பருவ மழையின் போது தூத்துக்குடிக்கு வருகை தந்த அலுவலர்களின் நேராய்வின் போது

இடத்தின் தன்மைக்கேற்ப மழைநீர் வடிகால் அமைக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டது என்பதும், அதன்படி மேற்படி பகுதியில் மழைக்காலங்களில் மழைநீரை, நகரில் இருந்து கடத்துவதற்கு வசதியாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், உப்பள பகுதியில் வடிகாலில் உள்ள நீர் செல்லாதவாறு மாற்று வழியில் செல்ல திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு பணி துவங்க நடவடிக்கையில் உள்ளது என்பதும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்தும் அறிய முடிகிறது.

ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தூத்துக்குடி இருக்கன்குடியை சேர்ந்த திரு எம். கணேசன் என்பவருக்கு, தூத்துக்குடி மாநகராட்சியின் பொதுதகவல் அலுவலர் கடித ந.க எண் இ1/1898/2019 வ.ம. நாள் 9.7.2019ல் அளித்துள்ள பதிலில்,

“(அ) தூத்துக்குடி காளவாசல் உப்பளங்களுக்கு செல்லும் ரோடு உப்பு இலாக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

(ஆ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை.

(இ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் புதியதாக ரோடு மற்றும் மராமத்து பணிகள் செய்யவில்லை.

(ஈ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.

(உ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை. உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.

(ஊ) கடந்த 10 ஆண்டுகளில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் நிர்வாகம் செய்யவில்லை.

(எ) கடந்த 10 ஆண்டுகளில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் நிர்வாகம் செய்யவில்லை.

(ஏ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் கடற்கரை கட்டுபாடு பகுதியில் அமைகிறது.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, மனுதாரர், காந்தி இர்வின் உப்பு உற்பத்தியளார்களின் சங்க கட்டுப்பாட்டு பகுதியின் உப்பு சங்கம் பாதை மேப் என 1964ம் வருடம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்கூறிய இடங்களில் சுமார் 6 கி.மீ பாதை/ரோடு சங்கம் (GISMA) மூலம் போடப்பட்டு அதனை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் சங்கத்தின் மூலம் செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள தூத்துக்குடி மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள தார்ரோடு, அங்கு உள்ள ஆக்கிரமிப்பு நிலப்பகுதியின் கிராம கணக்குகளின்படி சர்க்கார்-புஞ்சை – தரிசு எனவும், தடையாணைப் பதிவேட்டில் உள்ள தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண் 183/3 வீஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் ஒரு பகுதி என்பது பற்றி தெளிவுரை அனுப்புமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் 27.10.2025 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் கோரப்பட்டும், இதுவரை தெளிவுரை பெறப்படவில்லை.

இந்நேர்வில் மனுதாரர் தனது மனுவில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள உப்பள நிலப்பகுதியில் பல இடங்களில் தூத்துக்குடி மாநகராட்சி அத்துமீறி நுழைந்து சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் வகையில் (1) தார்ரோடு (2) கழிவுநீர் கால்வாய் (3) குடிநீர் பைப்லைன் ஆகியவற்றை பல கோடி ரூபாயில் அமைத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரியது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P (MD) No. 12789 of 2023 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. தங்கவேல்,
பிளாட் எண் 216, எஸ்1, 2 மாடி,
பாக்கியலட்சுமி நகர், 2வது தெரு,
எஸ். கொளத்தூர்,
சென்னை–600 117.

(2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(3) உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

12/2/26

செயலாளர்.

12-2-26